கணக்கில் ரூ.93,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

5. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *22–8–2016 திங்கட்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 22–8–2016 திங்கட்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

2016 ஆகஸ்ட் 19] [பேரவைத் தலைவர்]

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

22–8–2016 திங்கட்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் *22–8–2016 (திங்கட்கிழமை)* காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

98. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

99. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2016. (தமிழ், ஆங்கிலம்)

100. மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

101. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2016–2017. (தமிழ்)

102. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மக்கள் சாசனம், 2016. (தமிழ்)

103. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" என்கிற நூல். (தமிழ்)